CC 119/2023

பு.சா. 1

பெயர் : சுகந்தி

25.07.2025

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

1. எதிரி எங்கு வைத்து என்னிடம் பணம் கேட்டார் என்று எனது புகார், வழக்கறிஞர் அறிவிப்பு மற்றும் எனது நிரூபண வாக்குமூலத்தில் கூறியுள்ளேனா என்றால் தெரியவில்லை. எதிரிக்கு எங்கு வைத்து பணம் கொடுத்தேன் என்பதை எனது புகார், வழக்கறிஞர் அறிவிப்பு மற்றும் எனது நிரூபண வாக்குமூலத்தில் கூறியுள்ளேனா என்றால் சாட்சியிடம் புகார்மனுவானது கொடுக்கப்பட்டு அவர் அதனை படித்து பார்த்து கூறவில்லை என்று பதில் கூறினார். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காண்பிக்கப்படும் பு.சா.ஆ.3 ல் தொகையானது 2 இலட்சம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். எதிரிக்கு கடன் கொடுத்தாக நான் கூறும் சமயத்தில் கொரோன இரண்டாவது ஊரடங்கு அமல்படுத்தப்பட்டிருந்த காரணத்தினால் நான் எதிரிக்கு கடன் கொடுத்திருக்க வாய்ப்பில்லை என்றால் சரியல்ல நான் அந்த சமயத்தில் மதுரையில் உள்ள புதூரில் தான் இருந்தேன். அப்போது காளவாசலில் உள்ள அலுவலகத்தில் வைத்து கொடுக்கப்பட்டது. மேற்படி ஊரடங்கு காலகட்டத்தில் அலுவலகம் இயங்கிவராத சூழ்நிலையில் நான் எதிரிக்கு பணம் கொடுத்திருக்க வாய்ப்பில்லை என்றால் சரியல்ல நான் அலுவலகத்தில் வைத்துதான் கொடுத்தேன். எதிரிக்கு கடன் கொடுத்தாக கூறும் சமயத்தில் அதற்கு ஆதரவாக கடனுறுதி சீட்டு மற்றும் இதர ஆவணங்களை வாங்கினேனா என்றால் இல்லை காசோலை மட்டும் தான் கொடுத்தார். உண்மையில் நான் கடன் கொடுத்திருந்தால் காசோலை தவிர்த்து இதர ஆவணங்களை நான் பெற்றிருப்பேன் என்றால் சரியல்ல. மேற்படி எனது பதிலில் இருந்து எதிரி என்னிடம் கடன் வாங்க வில்லை என்று நிரூபணமாகிறது என்றால் சரியல்ல. எதிரியிடம் இருந்து வட்டி தொகையை பெற்றதற்கான ஆவணங்களை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். உண்மையில் எதிரி என்னிடம் வட்டிக்கு பணம் வாங்கியிருந்தால் நான் ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருப்பேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் எனக்கும் எந்த காலகட்டத்திலும் கடன் கொடுக்கல் வாங்கல் இல்லை என்றால் சரியல்ல. வழக்கு காசோலை சட்டப்படியான கடனுக்காக என்னிடம் கொடுக்கப்படவில்லை என்றால் சரியல்ல. எதிரி மதுரையில் உள்ள ஆர்.பி.ஓ. நிறுவனத்தில் கணக்கராக வேலை பார்க்கும் போது எதிரியின்

காசோலையை நான் எடுத்து தவறாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. அதனால் தான் எதிரியின் கணவர் பெயர் மற்றும் அவர் வசித்து வரும் முகவரி எனக்கு தெரியவில்லை என்றால் அலுவலகத்தில் வைத்து எதிரியை மட்டும் தான் பார்த்தேன். எதிரியின் மகன் தான் அலுவலகம் வைத்திருந்ததாக என்னிடம் சொன்னார். அதனால் மற்ற விவரங்கள் எனக்கு தெரியவில்லை. நம்பிக்கையின் அடிப்படையில் நான் கடன் கொடுத்தேன். எதிரிக்கு இவ்வழக்கு அழைப்பானை வந்த பிறகு தான் நான் எதிரியின் காசோலையை தவறாக எடுத்து பயன்படுத்திய விவரம் தெரியவந்தது என்றால் சரியல்ல. எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல. எதிரி மாற்றுமுறை ஆவணச்சட்டத்தின் கீழ் எந்த தவறும் செய்யவில்லை என்றால் சரியல்ல.